**DEPOSITION OF WITNESS**
(Chapter XXV Code of BNSS 2023)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK
**CC No. 97/2024**
Deposition of Witness of PW7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயரத் | Calling | : | |
| Husband's Name | : | | Age | : | |
| Village | : | | | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 16th ஜூன் 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கோயமுத்தூர் செட்டிபாளையம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.07.2021 ம் தேதி நான் மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மொடக்குறிச்சி காவல்நிலைய தலைமை காவலர் மனோகரன் என்பவர் புலன் விசாரணையின் பொருட்டு எனது பார்வைக்கு வைத்த மொடக்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.158/2021 சட்டபிரிவுகள் 279, 337 இதச வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 03.07.2021 ம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடமான ஈரோடு டூ கரூர் ரோடு சாடிவப்பாளையம் HP பெட்ரோல் பங்க் அருகில் சென்று சாட்சிகள் சுரேஷ் சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

2. **அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் சரஸ்வதி, குப்பாயி, புவனேஸ், சுரேஷ், சக்திவேல் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 08.07.2021 ம் தேதி குற்றத்தை ஒப்புக்கொண்டு மொடக்குறிச்சி காவல்நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரி குமரவேல் என்பவரை 12.30 மணிக்கு கைது செய்து திரேக பரிசோதனை உரிய பிணையின் பேரில் விடுவித்தேன். 09.07.2021 ம் தேதி விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனமான யுனிகார்ன் TN 33 BH 4449 வாகனத்தை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன்.

3. 10.07.2021 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்டு திருச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த முத்தம்மாள் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்ற தகவலை பெற்ற நான் இவ்வழக்கின் சட்டபிரிவினை 279, 337 இதச விலிருந்து 279, 337, 304A இதச வாக சட்டபிரிவு மாற்றம் செய்து சட்டபிரிவு

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.16 20:20:11 +0530

மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டபிரிவு மாறுதல் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மொடக்குறிச்சி வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் வாய்மொழி உத்தரவுப்படி 10.07.2021 ம் தேதி மதியம் 13.00 மணிக்கு திருச்சி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன முத்தம்மாள் என்பவரின் பிரேதத்தின் மீது 13.30 மணி முதல் 15.30 மணி வரை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்க்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை பெற்றேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. இறந்து போன முத்தம்மாளின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு அவரது பிரேதத்தை திருச்சி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை பிரேத பரிசோதனை அலுவல் மருத்துவருக்கு தலைமை காவலர் 854 சிவானந்தம் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். சாட்சிகள் சரஸ்வதி, செல்வகுமார், மதன்குமார், குழந்தைவேல், குணசீலன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.16 20:20:15 +0530